Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 24.05.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி : 24.05.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

குடியரசுத் தலைவர் மாளிகையில், நாளை நடைபெறும் பத்மவிருதுகள் வழங்கும் விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பத்ம விருதுகளை வழங்க உள்ளார்.

ஆப்பிரிக்காவில் எபோலா பரவல் அதிகரித்துவரும் நிலையில், அவசர மருத்துவப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் முதல் தொகுப்பை இந்தியா, இன்று அனுப்பியுள்ளது.

மத்திய பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, புதுடெல்லியில் 'சகுரா அறிவியல் திட்டம் 2026'-இல் பங்கேற்கும் மாணவர் குழுவை ஜப்பானுக்கு வழியனுப்பி வைத்தது.

நோய்கள் பரவுவதை தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. Tedros Adhanom வலியுறுத்தி உள்ளார்.

***பத்ம விருதுகள் (19)***

நாட்டின் உயரிய விருதுகளான பத்ம விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது. இந்த ஆண்டிற்கான பத்ம விருதுகள் குடியரசுத் தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி, 5 பத்ம விபூஷன், 13 பத்ம பூஷன் மற்றும் 113 பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன. பத்ம விபூஷன் விருது மறைந்த ஹிந்தி நடிகர் தர்மேந்திரா, மறைந்த கேரள முன்னாள் முதலமைச்சர் அச்சுதானந்தன், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி K.T. தாமஸ் உள்ளிட்ட 5 பேருக்கு அறிவிக்கப்பட்டது.

பத்ம பூஷன் விருது மறைந்த ஜார்க்கண்ட் முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன், நடிகர் மம்முட்டி, பிரபல டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ், தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் K.R. பழனிசாமி, ஈரோட்டைச் சேர்ந்த சமூக சேவகர் S.K.M. மயிலானந்தன் உள்ளிட்டோருக்கு அறிவிக்கப்பட்டது. இதேபோல் நடிகர் மாதவன், கிரிக்கெட் வீரர் ரோஹித் ஷர்மா, எழுத்தாளர் சிவசங்கரி, மெட்ராஸ் ஐஐடி இயக்குநர் காமகோடி உள்ளிட்டோருக்கு பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன.

குடியரசுத் தலைவர் மாளிகையில், நாளை நடைபெறும் விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு பங்கேற்று, பத்ம விருதுகளை வழங்க உள்ளார்.

*எபோலா -1 (4)*

ஆப்பிரிக்காவில் எபோலா பரவல் அதிகரித்துவரும் நிலையில், ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களுக்கு அவசர மருத்துவப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் முதல் தொகுப்பை இந்தியா, இன்று அனுப்பியுள்ளது. இது குறித்த மேலும் சில தகவல்கள்…

**(வாய்ஸ்)**

*எபோலா - 2 (15)*

**(வாய்ஸ்)**

உருவாகி வரும் எபோலா பொது சுகாதார அவசரநிலையை கருத்தில் கொண்டு, இந்தப் பொருட்கள் அனுப்பப் பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் கூறினார். ஆப்பிரிக்க ஒன்றியத்துடன் ஒருங்கிணைந்து, ஆப்பிரிக்காவின் இந்த நெருக்கடிக்கு ஆதரவளிப்பதில் இந்தியா உறுதியாக உள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

பொது சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துவதிலும், சுகாதார அவசர நிலைகளுக்கு பதிலளிப்பதிலும் ஆப்பிரிக்க நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து ஈடுபட்டு வருவதை இந்த உதவி பிரதிபலிக்கிறது. உலகளாவிய மனிதாபிமான உதவியின் ஒரு பகுதியாக, நோய்ப் பரவல்கள் மற்றும்

இயற்கை பேரழிவுகளின் போது நட்பு நாடுகளுக்கு தொடர்ந்து இந்தியா ஆதரவளித்து வருகிறது.

எபோலா ஒரு கடுமையான மற்றும் பெரும்பாலும் மரணத்தை விளைவிக்கும் வைரஸ் நோயாகும். இதன் நோய்ப் பரவல்களை கட்டுப்படுத்த அவசர பொது சுகாதார நடவடிக்கைகளும், ஒருங்கிணைந்த சர்வதேச ஆதரவும் தேவைப்படுகின்றன.

***எபோலா - 3 (13)***

இதன் எதிரொலியாக காங்கோ, உகாண்டா, தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது. இந்நாடுகளில் பயணம் மேற்கொண்டிருக்கும் இந்தியர்கள் அந்நாட்டு சுகாதாரத்துறையின் அறிவுறுத்தலின்படி செயல்பட வேண்டும் என்று கூறியுள்ளது. இந்தியாவில் தற்போது எபோலா வைரஸ் தொற்று குறித்த அறிகுறிகள் இல்லையென்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, காங்கோ நாட்டில், எபோலா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 204ஆக அதிகரித்துள்ளது. அந்நாட்டு சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 867 பேருக்கு இத்தொற்றின் அறிகுறிகள் கண்டறியப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

எபோலா வைரஸ் தொற்று பரவுவதை அடுத்து, அந்நாடுகளில் பொது சுகாதார அவசர கால நிலையை உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

***ஜெய்சங்கர் -1 (16)***

இந்தியா – அமெரிக்கா இடையேயான நட்புறவு உலக அளவில் மிகவும் முக்கியமானது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Marco Rubio-வுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இரு நாடுகளும் பல்வேறு உலகளாவிய பிரச்சனைகளை ஒன்றிணைந்து எதிர்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

சர்வதேச பிரச்சனைகளில் இந்தியா மற்றும் அமெரிக்காவின் ஒருமித்த கருத்துகள் முக்கியமானது என்றும், இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் மேம்படும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Marco Rubio, 4 நாள் அரசு முறைப் பயணமாக நேற்று புதுடெல்லி வந்தடைந்தார்.

நாளை மறுதினம் நடைபெற உள்ள QUAD வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Marco Rubio, ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Penny Wong,

***ஜெய்சங்கர் - 2 (3)***

ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Toshimitsu உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். இந்தோ – பசிபிக் பகுதியில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

***ஜோதிராதித்ய சிந்தியா (10)***

சிக்கிம் மாநிலத்தை பாதுகாக்கும் பொக்கிஷமாக கஞ்சன்ஜங்கா விளங்குவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா எழுதியுள்ள கட்டுரையை பிரதமர் திரு. நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், சுற்றுலாப் பயணிகள் சிக்கிம் மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். சிக்கிம் மக்களின் கலாச்சாரம், ஆன்மீகம், வரலாற்று முக்கியத்துவம் குறித்து அந்த கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளதாக, பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிக்கிம் மாநிலத்தின் வளர்ச்சிப் பாதை குறித்தும், எதிர்கால திட்டங்கள் குறித்தும் இந்தக் கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாக திரு.மோடி மேலும் கூறியுள்ளார்.

***பியூஷ் கோயல் (12)***

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இந்திய வர்த்தகத் தலைவர்களின் தூதுக்குழுவுடன் மூன்று நாள் பயணமாக நாளை கனடா செல்கிறார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை மேம்படுத்துவதற்காக, திரு. கோயல், ஒட்டாவா மற்றும் டொராண்டோவில் இருதரப்பு சந்திப்புகளை மேற்கொள்வார் என்று வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பயணத்தின் போது, ஒட்டாவாவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது. மேலும், 2030 ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை 70 பில்லியன் கனேடிய டாலராக விரிவுபடுத்துவதற்கான லட்சியத்துடன், இந்த ஆண்டு இறுதிக்குள் சமச்சீரான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை விரைவில் முடிக்க இரு தரப்பினரும் பணியாற்றி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சகுரா -1 (3)*

மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும், பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, புதுடெல்லியில் நேற்று 'சகுரா அறிவியல் திட்டம் 2026'-இல் பங்கேற்கும் மாணவர் குழுவை ஜப்பானுக்கு வழியனுப்பி வைத்தது. இது குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

*சகுரா - 2 (18)*

(வாய்ஸ்)

15 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 24 சிறுவர் மற்றும் 32 சிறுமியர் உள்பட மொத்தம் 56 பள்ளி மாணவர்களும், அவர்களுடன் இந்தியாவின் சார்பில் 4 மேற்பார்வையாளர்களும், இம்மாதம் 30-ஆம் தேதி வரை ஜப்பானுக்குப் பயணம் மேற்கொள்வார்கள் என்று கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்கள், அரசின் 'தேசிய வருவாய் மற்றும் தகுதி அடிப்படையிலான கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்' கீழ் உதவித்தொகை பெற்றவர்கள் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

ஏப்ரல் 2016 முதல் இந்தியா இத்திட்டத்தில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இளம் மாணவர்களின் அறிவுசார் எல்லைகளை விரிவுபடுத்தவும், அவர்களிடையே அறிவியல் தேடல் ஆர்வத்தை

வளர்க்கவும், 'ஜப்பான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முகமை' கடந்த 2014-ஆம் ஆண்டு முதல், 'அறிவியலில் ஜப்பான்-ஆசிய இளைஞர் பரிமாற்றத் திட்டம்' எனப்படும் 'சகுரா அறிவியல் திட்டத்தை' செயல்படுத்தி வருவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஜப்பானின் மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சூழலையும், அந்நாட்டின் செழுமையான கலாச்சாரப் பாரம்பரியத்தையும் நேரில் அனுபவித்து அறியும் வகையில், மாணவர்கள் ஒரு வார காலத்திற்கு ஜப்பானுக்கு அழைக்கப்படுகிறார்கள்.

***WHO (9)***

நோய்கள் பரவுவதை தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. Tedros Adhanom வலியுறுத்தி உள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற 79ஆவது உலக சுகாதார அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றிய அவர், காசநோய் போன்ற நோய்களை தடுப்பது, அவசரகால சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உலக சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, உறுப்பு நாடுகள் இணைந்து செயல்பட இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

***நீட் (14)***

நீட் இளங்கலை தேர்வு வினாத்தாள் கசிவு காரணமாக, இம்மாதம் 3-ம் தேதி நடைபெற்ற நீட் இளங்கலை தேர்வு ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து புதிய தேர்வு வரும் ஜூன் 21-ம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இந்நிலையில் 2026 நீட் தேர்வர்களுக்காக ஒரு புதிய இணையதளத்தை நேற்று முன்தினம் தேசிய தேர்வு முகமை தொடங்கியுள்ளது. தேர்வர்கள் தங்களது தேர்வு விண்ணப்பத் தொகையைத் திரும்பப் பெறுவதற்காக அந்த இணையதளத்தை அணுகி தங்களது வங்கி விவரங்களை வரும் 27-ம் தேதி வரை பதிவேற்றலாம்.

வரும் 27-ம் தேதி இரவு 11.50 மணி வரை தேர்வர்கள் தங்களது வங்கி விவரங்களை பதிவேற்ற முடியும். அந்த இணையதளத்தில் தேர்வர்களின் பெயர் விவரம், வங்கியின் பெயர், வங்கிக் கணக்கு எண், IFSC, ரத்து செய்யப்பட்ட வங்கிக் காசோலையின் நகல், ஆகியவற்றை பதிவு செய்ய வேண்டும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

***மன்சுக் மாண்டவியா (10)***

ஆரோக்கியமான சமூகத்தால் மட்டுமே வளமான தேசத்தை உருவாக்க முடியும் என்று, மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறினார். குஜராத்

மாநிலம், அகமதாபாத்தில், இன்று அதிகாலை ஞாயிறுதோறும் சைக்கிள் மற்றும் காமன்வெல்த் தினத்தை முன்னிட்டு இளைஞர்களிடையே உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார்.

சைக்கிள் ஓட்டுவது எரிபொருளை மிச்சப்படுத்துகிறது என்றும், மாசுபாட்டிற்கு சைக்கிள் ஓட்டுவது தீர்வு என்றும் திரு. மாண்டவியா கூறினார்.

இந்நிகழ்ச்சியில், அம்மாநில துணை முதல்வர் திரு. ஹர்ஷ் சங்வி, நடிகர் திரு. ஆயுஷ்மான் குரானா, ஒலிம்பிக் பதக்கம் வென்ற திரு. ககன் நரங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

***வேதபுரீஸ்வரர் புதுச்சேரி (11)***

புதுச்சேரி காந்தி வீதியில் அமைந்துள்ள திரிபுரசுந்தரி சமேத வேதபுரீஸ்வரர் கோவிலில், 40-ம் ஆண்டு மகோற்சவம் கொடியேற்றத்துடன் நேற்றுத் தொடங்கியது.

தொடர்ந்து, பஞ்சமூர்த்தி மற்றும் ரிஷப வாகனத்தில் சுவாமி வீதியுலா நடைபெற்றது. உற்சவத்தை முன்னிட்டு தினமும் காலை 7 மணிக்கு சந்திரசேகரர் வெள்ளி பல்லக்கில் வீதியுலா, காலை 10 மணிக்கு சிறப்பு அபிஷேகம், இரவு பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா நடைபெறுகிறது. நாளை மறுநாள் காலை 10 மணிக்கு சுவாமி

திருக்கல்யாண உற்சவம், இரவு 7 மணிக்கு அறுபத்து மூவர் வீதியுலாவும் நடைபெறுகிறது.

மேலும், 30-ந் தேதி காலை 7 மணிக்கு திருத்தேர் வீதியுலாவும், ஜூன் 1-ந் தேதி இரவு 7 மணிக்கு தெப்ப உற்சவமும் நடைபெற உள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

***ஐபிஎல் (8)***

ஐபிஎல், 20-20 கிரிக்கெட் போட்டியில், கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி – டெல்லி கேபிடல்ஸ் அணியுடன் மோதுகிறது.

தற்போது மும்பையில் நடைபெறும் ஆட்டத்தில், முன்னதாக ஆடிய ராஜஸ்தான் அணி, 8 விக்கெட் இழப்பிற்கு, 205 ரன் எடுத்து இருந்தது. 206 ரன் எனும் வெற்றி இலக்கை நோக்கி, தொடர்ந்து ஆடும், மும்பை அணி, சற்றுமுன் வரை, 2.6 ஓவரில், 2 விக்கெட் இழப்பிற்கு, 23 ரன் எடுத்து இருந்தது.

***வானிலை (5)***

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில், ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுவதால், தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி - காரைக்கால் பகுதிகளிலும், இன்றுமுதல் வரும் 30ஆம் தேதி

வரை, இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

குடியரசுத் தலைவர் மாளிகையில், நாளை நடைபெறும் பத்மவிருதுகள் வழங்கும் விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பத்ம விருதுகளை வழங்க உள்ளார்.

ஆப்பிரிக்காவில் எபோலா பரவல் அதிகரித்துவரும் நிலையில், அவசர மருத்துவப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் முதல் தொகுப்பை இந்தியா, இன்று அனுப்பியுள்ளது.

மத்திய பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, புதுடெல்லியில் 'சகுரா அறிவியல் திட்டம் 2026'-இல் பங்கேற்கும் மாணவர் குழுவை ஜப்பானுக்கு வழியனுப்பி வைத்தது.

நோய்கள் பரவுவதை தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. Tedros Adhanom வலியுறுத்தி உள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. NV / KR / RK**